பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 19 செவ்வாய்க்கிழமை (5-12-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 9

## யாழ். செயலகத்தில் நேற்று பெரும் குண்டு வெடிப்பு!

## கட்டடம் இடிந்து விழுந்தது!! படையினர் பலர் பலி?

சாவகச்சேரி, டிச. 5

யாழ். செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பெரும் குண்டு வெடிப்பினால் செயலகக் கட்டடத்தின் பெரும் பகுதி இடிந்து வீழ்ந்தது

இடிபாடுகளிடையே சிக்கி படையினர் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் அதிக எண்ணிக்கையானோர் காயமடைந்திருக் கலாம் என்றும் ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

நேற்று முற்பகல் 11.45 மணியளவில் இந்தப் பாரிய குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது.

குறித்த நேரத்தில் வெடிக்கக் கூடிய நேரக் கணிப்பு குண்டே அங்கு பொருத்தப்பட்டு, தூரக்கட்டுப்பாட்டு கருவி மூலம் (ரிமோட் கொண்ட்ரோல்) வெடிக்க வைக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்திருக்கிறது.

செயலகக் கட்டடத்தினுள் இரு தினங்களுக்கு முன்னர் இக் குண்டை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புதிய ராணுவ நடவடிக்கை

# அரசு தயாராகும் அறிகுறி!

### வடமராட்சி நோக்கி நேற்றும் ஷெல்

பலாலி முகாமிலிருந்து வடமராட்சி நோக்கி நேற்றும் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

நேற்றுக் காலை பொலிகண்டிக்கும் திக்கத்துக்கும் இடையில் உள்ள கரையோர தோட்டம் ஒன்றில் இரு ஷெல்கள் விழ்ந்து வெடித்தன. (இ-15-173-80)

## முன்னெச்சரிக்கையாக நடக்குமாறு புலிகள் மக்களுக்கு அறிவுறுத்து

சாவகச்சேரி, டிச. 5

சந்திரிகா அரசு அடுத்த கட்ட நடவடிக்கையாக குடாநாட்டின் மீது புதிய இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன —

இராணுவ நடவடிக்கைக்கான பூர்வாங்கப் பணிகளில் படையினர் ஈடுபட்டு வருவதை அறியமுடிகிறது —

எனவே மக்கள் நெருக்கடிகளைக் குறைக்கும் முகமாக முன்னெச்சரிக்கையாக நடந்து கொள்ளவேண்டும்—

வன்னிக்குச் செல்வதன் மூலம் எதிர்வரும் நாள்களில் ஏற்படும் நெருக்கடியைக் குறைக்க முடியும் — என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் விடுத்த அறிக்கையில் அறிவுறுத்தி உள்ளனர்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சந்திரிகாவின் அரசாங்கம் அடுத்த கட்ட நகர்வு இராணுவ அம்சத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

கிளாலிப் பாதை ஊடான போக்குவரத்தை தடுக்கும் நோக்கில் ஆனையிறவு, பூநகரி பகுதிகளில் இருந்து பாரிய இராணுவ நடவடிக்கைக்கான பூர்வாங்கப் பணிகளில் படையினர் ஈடுபட்டு வருவதை அறிய முடிகிறது.

### துருப்புகள், ஆயுதங்கள் குவிப்பு

ஆனையிறவிலும், கட்டைக்காட்டிலும் டாங்கிகளும், துருப்புக்களும் குவிக்கப்பட்டு பாரிய இராணுவ நடவடிக்கைக்கு படையினர் தயாராகுவதை அறிய முடிகிறது.

யாழ்ப்பாண நடவடிக்கை முடிந்தபின் தென்மராட்சியில் உள்ள மக்களின் இயல்பு வாழ்க்கையை குழப்ப படையினர் குண்டு வீச்சுக்களையும் ஷெல் தாக்குதல்களையும் மேற்கொள்ளவாய்ப்பு உண்டு

படையினரின் இராணுவ நகர்வுக்குள் சிக்காமல் முன்னெச்சரிக்கையுடன் மக்கள் செயற்படவேண்டும்.

ஸ்ரீலங்கா அரசின் திட்டத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செய்தியாளர் வருகை குண்டு வெடிப்பால் தடை

கொழும்பு, டிச. 5

யாழ். நகரைப் படையினர் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்ததை அடுத்து கொழும்பில் இருந்து உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர்களை விமான மூலம் இன்று யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும் —

ஆனால் நேற்று யாழ். செயலகத்தில் இடம் பெற்ற பெரும் குண்டு வெடிப்புச் சம்பவத்தினால் அவர்களை அழைத்துச் செல்வது பின்போடப்பட்டிருப்பதாகவும் ''சண்டே ரைம்ஸின்' பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்தார்.

## சூரியப் பிரகாசம் ராணுவ நடவடிக்கை தொடர்கிறது

### தலைமைச் செயலகம் அறிவிப்பு

கொழும்பு, டிச. 5

'சூரியப் பிரகாசம்' இராணுவ நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருவதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் நேற்று அறிவித்தது.

கொழும்புத்துறை பொது வேலைகள் திணைக்கள அலு

(6 ஆம் பக்கம் பார்க்க)

# படை விலக்க அரசை வற்புறுத்த

# ஐ. நா. செயலரிடம் வேண்கோள்

### யாழ்.பிரசைகள் குழு மகஜர்

சாவகச்சேரி, டிச. 5

★ தமிழ் மக்கள் தமது சொந்த இருப்பிடங்களுக்கு மீண்டு சென்று அமைதியாக வாழ வழிவிடும் வகையில் தமிழர் தாயகத்திலிருந்து ஆயுதப் படைகளை விலக்குமாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை வற்புறுத்துவதற்கு முன்முயற்சி எடுக்கும் வண்ணம் தங்களை நாம் வேண்டுகிறோம்.

★ தமிழர்களின் அரசியல் வேட்கைகளைத் திருப்தி செய்யும் வகையிலான அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைளையும் எடுக்குமாறும் தங்களை வேண்டுகின்றோம்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் திரு. பூட்ரஸ் பூட்ரஸ் காலிக்கு யாழ். பிரசைகள் குழு (நவம்பர் 27 ஆம் திகதி) அனுப்பிய மகஜரில் இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

1995 ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி நாம் அனுப்பி இருந்த கடிதத்தினைத் தங்கள் தயவான கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறோம்.

அக்கடிதத்தில், இந்நாட்டில் வாழும் தமிழர் மீது மேற்கொள்ளப்படும் இராணுவ ஒடுக்கலை நிறுத்துமாறு ஸ்ரீலங்கா ஜனாதிபதி மேதகு திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க மீது நெருக்குதல் கொடுக்குமாறும் ஸ்ரீலங்காவில் நிலவும் இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறும் நாம் வேண்டியிருந்தோம். தொடர்ந்து கொண்டிருக்கும் இராணுவ நடவடிக்கை, பொதுமக்களுக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### ★ அன்ரனோவ் விமான அனர்த்தம்

# பலியான 11 படையினரது சடலங்கள் இராமேஸ்வரத்தில் கரை ஒதுங்கின!

புதுடில்லி, டிச. 5

சிறிலங்கா விமானப் படையைச் சேர்ந்த பதினொரு பேரின் உருக்குலைந்த சடலங்கள் இராமேஸ்வரம் கடற்பகுதியில் கரை ஒதுங்கியுள்ளன என்று அறிவிக்கப்படுகிறது

கடந்த மாதம் 22ஆம் திகதி காரைநகருக்கு அருகே கடலில் திடீரென வீழ்ந்து மூழ்கிய ''அன்ரனோவ் 32'' விமானத்தில் இருந்த [illegible]

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PolioPlus

# பெற்றோர்களே!

ஐந்து வயதுக்குட்பட்ட உங்கள் பிள்ளைகளுக்கு எதிர்வரும் சனிக்கிழமை போலியோ தடுப்பு மருந்தை வழங்க நீங்கள் ஆயத்தமா?

**இன்னும்**

## மூன்று நாள்கள்

மட்டுமே உள்ளன!

உங்கள் பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய இது மிக அவசியமானது!

**டிசம்பர் 9 ஆம் திகதியை நினைவில் கொள்ளுங்கள்!**

## அறிவித்தல்

உரும்பிராயைச் சேர்ந்த சின்னத்துரை கனகராசா என்பவரைக் கோண்டாவிலைச் சேர்ந்த காசிப்பிள்ளை சிவபாதசுந்தரம் என்பவர்(பொறியியலாளர்) கீழ்க்காணும் விலாசத்தில் வந்து சந்திக்கும் வண்ணம் வேண்டுகின்றார்.

'விக்ரேர்ஸ்' இரும்புக்கடை,
சாவகச்சேரி.

(39453)

## மரப்பலகை கொள்வனவு

சகலவகைப் பலகைகளும் சதுர அடி ஒன்று ரூபா 44/- க்கு கொள்வனவு செய்யப்படுகின்றது. மாம் பலகை 1'' கனதிக்கு குறையாமலும் ஏனையவை 7/8'' கனதியிலும் அகலம் 8'' க்கு குறையாமலும் 3 அடி நீளமும், அதன் மடங்கிலும் ஏற்றுக்கொள்ளப்படும். வழங்குநர்கள் சாவகச்சேரி நகரசபைக் கட்டடத்தில் அமைந்துள்ள யாழ். மாநகரசபை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

மாநகர ஆணையாளர்

சாவகச்சேரி
04-12-95

[39336]

## அறிவித்தல்

அகில இலங்கை
பரஸ்பர சகாய நிதிச்சங்கம் (வ - து)
வட்டுக்கோட்டை

தற்போது கொடிகாமம் சந்தியிலிருந்து 150 யார் தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இயங்கும் எமது சங்கத்தில் நகைகளை அடவு வைத்து 1 வருட காலமாக மீளப்பெறாதவர்களும், வட்டியும் முதலுமாக தற்போதைய சந்தைப் பெறுமதிக்கு மேற்பட்டுவிட்ட அடகுள்ளவர்களும், ஏற்கனவே அடகு வைக்கும் பொழுது நேரில் அறிவித்தபடியும், சங்க நிபந்தனைகளுக்கு அமையவும் இவ் அறிவித்தல் பிரசுரமான 2 கிழமை காலத்தில் அவர்களின் நகைகள் மீளப்படாவிடில் விற்கப்படும் என்பதை அடகு வைத்த அனைவருக்கும் அறிவிக்கின்றோம்.

செ. இ. ஆனந்தராசா
பொதுமுகாமையாளர்

[39334]

## கண்ணீர் அஞ்சலி

அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்க கிளை முகாமையாளர், மல்லாகத்தைச் சேர்ந்த

**சிவப்பிரகாசம் கெங்காதரன்**

03 - 12 - 1995 இல் காலமாகிவிட்டார்.

இவரது ஈமக்கிரியைகள் நேற்று (4 - 12 - 95) மிருசுவில் உசனில் நடைபெற்றன.

அன்னாரின் மறைவையொட்டி அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**இயக்குநர் சபை, பணியாளர்கள்**
அளவெட்டி -- மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்
கொடிகாமம்.

[39335]

## வடமராட்சியில் மற்றொரு சடலம் கரை ஒதுங்கியது

வடமராட்சி, டிச. 5

வடமராட்சி வடக்கு கடற்கரையில் மிகவும் உருக்குலைந்து போன சடலம் ஒன்று நேற்றுக் காலையில் கரை ஒதுங்கியது.

வியாபாரிமூலைச் சந்திக்கு சமீபமாக கரையில் ஒதுங்கிக் காணப்பட்ட இச் சடலம் நீண்ட நாள்கள் நீரில் கிடந்து அழுகி உருக்குலைந்ததாகக் காணப்பட்டது.

கடலில் வீழ்ந்து மூழ்கிய அன்ரனோவ் - 32 விமானத்தில் பயணம் செய்த படையினரில் ஒருவரது சடலமாக அது இருக்கலாம் எனக் கருதப்பட்டது. (ஐ-173)

## வருவாய் பகுதி: வருமாறு அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிச. 5

வலிகாமம் பகுதியில் கீழ்க்காணும் முகவரியில் வசித்து வந்துள்ளோரை சாவகச்சேரி கச்சாய் வீதியில்அமைந்துள்ள தென்மராட்சிக் கோட்ட வருவாய்ப் பகுதிச்செயலகத்திற்கு நாளை புதன் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு வருகை தரும்படி கோரப்பட்டுள்ளது.

★ முருகுப்பிள்ளை ரதிவீர குலரத்தினம், (வட்டுகிழக்கு, சித்தன்கேணி)

★ சின்னப்பிள்ளை ஆறுமுகம், (மூளாய் வீதி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை)

★ குமாரசாமி வேலாயுதபிள்ளை, (சங்கரத்தை வீதி, வட்டு மேற்கு, வட்டுக் கோட்டை)

## மக்கள் வங்கி சுன்னாகம் கிளை

சாவகச்சேரி, டிச. 5

மக்கள் வங்கியின்சுன்னாகம் கிளை இன்றுமுதல் செவ்வாய் வியாழக்கிழமைகளில் சாவகச்சேரி கிளைக் கட்டடத்தில் இயங்கும்.

இந்தக் கிளை சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கக் கட்டடத்தில் இயங்கி வந்தது தெரிந்ததே (இ-3)

## வலிகாமப் பகுதி வணிகருக்கு அறிவித்தல்

வலிகாமம் வருவாய்ப் பகுதி செயலகத்தில் வரி செலுத்தியோர் அனைவரையும் 1995 ஒக்டோபர் மாத விற்பனை வரியை சாவகச்சேரி கச்சாய் வீதியில் அமைந்துள்ள தென்மராட்சிக் கோட்ட வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் செலுத்தும் படியும் —

வலிகாமம் பகுதியிலிருந்து தென்மராட்சி, வடமராட்சி ஆகிய இடங்களில் இடம் பெயர்ந்து தற்காலிக வாணிபம் அல்லது தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் தற்காலிக இடமாற்றப் பதிவுச் சான்றிதழை மேற்படி தென்மராட்சி வருவாய்ப்பகுதிச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளும்படியும் — வருவாய்ப் பகுதியினர் கோரி உள்ளனர். (இ)

## வர்த்தக திணைக்களம் புதிய கிளை

வடமராட்சி, டிச. 4

வடமராட்சிப் பகுதியில் வர்த்தகத் திணைக்களத்தின் மூன்றாவது கிளை கரவெட்டி சாமியன் அரசடியில் கடந்த வெள்ளியன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வடமராட்சியில் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் வர்த்தகத் திணைக்களத்தின் இருகிளைகள் இயங்கிவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

[ஐ-173]

## அலரி மாளிகை முன்பாக தமிழ் தம்பதியினர் கைது!

கொழும்பு, டிச 5

அலரிமாளிகையின் முன்பாக சந்தேகத்துக் கிடமான வகையில் நடமாடியதாகக் கூறி இளம் தமிழ் தம்பதியரை ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவு அதிகாரிகள் கடந்த 29 ஆம் திகதி கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இந்த தம்பதியர் மேல்விசாரணைக்காக பொலீஸாரிடம் ஒப்படைக்கப் பட்டிருப்பதாக ''லங்கா தீப'' செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ-6)

## பரி. யோவான் கல்லூரி

**யாழ்ப்பாணம்**

கல்லூரி ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவரையும் இன்று (5-12-95) கணக்காளருடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

திருமதி சு. இராசதேவன்,
மே/பா. சுபாஸ் சந்திரன்,
தாமரைக்குளம்,
துன்னாலை தெற்கு,
கரவெட்டி.

(சாவகச்சேரி வீதியில் கலிகைச்சந்தியில் இருந்து மந்திகை நோக்கி 50 யார்)

(39333)

## தசாக அழைப்பு

**திருமதி பவானி அம்மா**

சங்குவேலி ஸ்ரீ சிவஞானப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு பாலசுப்பிரமணியக் குருக்களின் அன்புப் பாரியாரும், திருமதி சறோஜினி, திருமதி வாகீஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், நித்தியானந்த சர்மா, மோகன் சர்மா ஆகியோரின் அன்பு மாமியும். மங்களேஸ்வர சர்மா, ஜோதீஸ்வரன், மயூறதி, கோபிகிருஷ்ணன், ஷேவிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாகிய திருமதி பவானி அம்மா 3-12 95 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மட்டுவில் விளைவேலி வினாயகர் ஆலய மேற்கு வீதியில் நடைபெற்றன. 12-12-95 பகல் 10.00 மணிக்கு தசாகம் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

முக்கிய குறிப்பு:-

12-12-95 அன்று நடைபெறும் தசாகக் கிரியையில் அனைவரும் கலந்துகொள்ளவும்.

தகவல்:
பிரம்ம ஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள்
[கணவர்]

விளைவேலி வினாயகர் ஆலய வீதி,
மட்டுவில்.

(39457)

## மரண அறிவித்தல்கள்

**அம்பலவாணர் செல்லத்துரை**

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை நேற்று (4-12-95) காலமானார்.

இவர் மனோன்மணியின் அன்புக் கணவரும், தங்கரத்தினத்தின் அன்புச் சகோதரனும், கமலாதேவி (பிரான்ஸ்), சுலோசனாதேவி (லண்டன்) காலஞ்சென்ற சுசீலாதேவி, சர்வேஸ்வரன் (பிரான்ஸ்), சிவாஜிபரமேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலிங்கம், விசயரத்தினம், பொன்ராசா, ஜெயராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (5-12-95) செவ்வாய்க்கிழமை கைதடி நுணாவிலில் பகல் 12 மணியளவில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. மனோன்மணி
[மனைவி]

ச. குகபாலன்.
(தபாலதிபர்)
கண்டி வீதி,
கைதடி நுணாவில்,
சாவகச்சேரி,

(39458)

**இளையதம்பி வைத்திலிங்கம்**

மந்துவிலைச் சேர்ந்த இளையதம்பி வைத்திலிங்கம் நேற்று (4 - 12 - 94) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கமுத்துவின் அன்புக் கணவரும், இராசரத்தினம் (கிராம அலுவலர் சாவகச்சேரி நகரம்), இராசேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ருக்மணிதேவியின் (ஆசிரியை - மகளிர் மகா வித்தியாலயம் சாவகச்சேரி) அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (5-12-95) செவ்வாய்க்கிழமை பி. ப. 2.00 மணியளவில் மந்துவிலில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வை. இராசரத்தினம்
(மகன்)

மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.

(39458)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டடங்கள், பாடசாலைகளுக்கு யாழ். நகரில் பெரும் அளவில் அழிவு

## நகரை மீண்டும் புனர்நிர்மாணம் செய்வதற்கு அரசு தெற்கிலிருந்து தொண்டர்களை அழைக்க முடிவு

கொழும்பு, டிச. 5

புலிகளின் கோட்டையாக விளங்கிய யாழ். நகரை புனரமைப்புச் செய்வதற்கு, ஸ்ரீ லங்கா அரசு தெற்கிலிருந்து தொண்டர்களை யாழ் நகருக்குக் கொண்டுவர இருப்பதாக ஆஸ்திரேலிய வானொலி நேற்றுத் தெரிவித்தது.

யுத்தத்தினால் யாழ் நகரின் கட்டடங்கள், வீடுகள், அரச அலுவலகங்கள், பாடசாலைகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருப்பதாகவும் — இவற்றை மீண்டும் புனரமைப்புச் செய்வது அவசியம் என்றும்—வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரும், வடக்கு புனர்நிர்மாண செயலணிக்குழுத் தலைவருமான நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

யாழ். நகரம் படையினரின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் வந்துவிட்டதாக அமைச்சர் நிமால் சிறிபால தெரிவித்தார் என்றும் ஆஸ்திரேலிய வானொலி தெரிவித்தது.

50 நாள் சண்டையின் பின்னர் யாழ். நகரம் ஸ்ரீலங்கா அரச படைகளிடம் வீழ்ச்சி அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நகரை நோக்கி முன்னேறிய படையினரின் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் காரணமாக எவரும் மீளச்சென்று குடியிருக்க முடியாத அளவுக்கு யாழ். நகரத்தில் குடியிருப்புகளுக்கும் பாடசாலைகளுக்கும் கட்டடங்களுக்கும் பெரும் சேதம் விளைவிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ)

## மலர் வாங்க ரூ. 15 லட்சம்

கொழும்பு, டிச. 5

1990 ஆம் ஆண்டுக்கும் 93 ஆம் ஆண்டுக்கும் இடையிலான 4 வருட காலத்தில் ஜனாதிபதி மாளிகையையும் ஜனாதிபதி செயலகத்தையும் அலங்கரிப்பதற்காக வாங்கப்பட்ட மலர்களுக்கு ரூ. 15 லட்சம் செலவிடப்பட்டிருப்பதாக தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். (இ)

# யாழ்ப்பாண நகரத்தின் வீழ்ச்சி விடுதலைப் புலிகளுக்கு முடிவு அல்ல

கொழும்பு, டிச. 5

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்களின் மனோநிலையை வளர்க்க முடிந்தாலும் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது, புலிகளுக்கு முடிவு கட்டியதாகிவிடாது.

ஆஸ்திரேலிய வானொலி நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தது.

விடுதலைப் புலிகள் அமைப்பிடம் சண்டையிடக்கூடிய போராளிகள் இன்னும் இருப்பதாகவும்—

குடாநாட்டின் ஒரு பகுதியும் வன்னி பெரும் நிலப் பரப்பின் பெரும் பகுதியும் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இன்னும் இருந்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ)

### கோப்பாயில் அமைந்துள்ள

## மாவீரர் துயிலும் இல்லம் மீது படையினர் தாக்குதல்

கோப்பாயில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லத்தை படையினர் மிக மோசமாகத் தாக்கிச் சேதப்படுத்தி இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

இதனை ஒப்புக் கொள்ளும் வகையில் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில், கோப்பாயில் உள்ள மாவீரர் துயிலும் இல்லம் மீது படையினர் கடும் பீரங்கித் தாக்குதலை நடத்தியதாகச் சூசகமாகத் தெரிவித்துள்ளது.

மண் மீட்புப்போரில் வீரச்சாவடைந்த ஆயிரத்து 884 மாவீரர்களின் கல்லறைகளும் நினைவுக்கற்களும் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நிறுவப்பட்டுள்ளன.

யுத்தம் நடக்கும்இடங்களில் போர்வீரர்கள், போராளிகள் அடக்கம் செய்யப்படும் நினைவிடங்கள், மயானங்கள் மீது எக்காரணம் கொண்டும் தாக்குதல் நடத்துவதைத் தவிர்த்துக் கொள்வது சர்வதேச ரீதியாகக் கடைப்பிடிக்கப்படும் இராணுவ மரபு ஆகும்.

போரில் இறந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் இந்த சர்வதேச இராணுவ மரபை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இனவாத நோக்கில் மீறியுள்ளனர். என சுட்டிக்காட்டப்படுகிறது. (ஐ)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரி கிளினிக் விஸ்தரிப்பு

சாவகச்சேரி, டிச. 5

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறும் நோயாளரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதால் வெளிநோயாளர் பிரிவும், மற்றும் ஏனைய கிளினிக் சிகிச்சை பகுதிகளும் விரிவுபடுத்தப்படவுள்ளன.

வைத்தியசாலையின் பின்புறமாக உள்ள மாவட்ட வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாக புதிய மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தூர இடங்களில் இருந்து வரும் வெளிநோயாளர்களின் நன்மை கருதி எழுதுமட்டுவாளில் ஸ்ரீகணேசா வித்தியாலயத்திலும், சரசாலை பிரதேச செயலகத்திலும் வெளிநோயாளருக்கான சிகிச்சை நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மிருசுவில் ஆஸ்பத்திரியிலும் வெளிநோயாளர் பிரிவுகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

இதற்காக மேற்படி வைத்தியசாலையிலும், ஸ்ரீகணேசா வித்தியாலயத்திலும் 15 அடி நீளமும், 5 அடி அகலமும் கொண்ட மண்டபம் நிறுவப்பட்டுள்ளது.

அதேசமயம் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு சுகாதாரத் திணைக்களத்தினால் மண் எண்ணெய்யால் இயங்கும் குளிர் சாதனப்பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

முன்னர் மின்சாரத்தினால் இயங்கும் குளிர்சாதனப் பெட்டி ஒன்றே பாவனையில் இருந்தது. (இ-31)

## நிலத்தினை மீட்டிட வந்திடு!

உன்தன் ஊரது புகுந்திட்ட
பகைவனை கலைத்திட
இரு விழி சிவந்து இனிக் களம் புகு
தமிழனே!
எரிபடும் எம்நில அழிவினைத் தடுத்திட
புலி என புகுந்துமே பகை அழி
தமிழனே!
நெரிபடும் எம் இன அழிவினை
உணர்ந்துமே
கடலதின் அலையென
கரும்புலிப் படையுடன்
புறப்படு புறப்படு தமிழ்மகனே!
கொடியவன் எம்நிலம் கொடியினை
ஏற்றிட துணிந்திட்ட போதிலே
வெறியுடன் நீ எழு தமிழனே!
பகை இனிப் பொடிப் பொடியாகட்டும்
வந்த பகைவனோ ஆயிரம் ஆயிரம்
பேர்களே ஆயினும் — அவனுடல்
சரித்துமே புதைகுழி அமைத்திட
துணிந்தெழு தமிழனே!
உயிரதும் உடலதும்
நிலையது இல்லையே — அதனால்
திடமுடன் புறப்படு
பகை பயந்து ஓடிடும்
நாளை எமது நிலமது மீண்டிடும்.

— வெள்ளை

## போராட்டத்தில் ஆசிரியர் இணைந்தார்

சாவகச்சேரி, டிச 4

மானிப்பாய் மெமோரியல் கல்லூரி ஆசிரியர் ஒருவர் மண் மீட்புப் போரில் தன்னை இணைத்துக் கொண்டார்.

மண் மீட்புப் போரில் இணைந்து கொள்ளுமாறு தமிழீழ தேசியத் தலைவர் அண்மையில் விடுத்த பகிரங்க அழைப்பை அடுத்து புத்திஜீவிகள், ஆசிரியர்கள் மாணவர்கள் கலைஞர்கள் என பெரும் எண்ணிக்கையானோர் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து வருகின்றனர். (ஐ-3)

## ஊர்முற்றம்

யாழ்ப்பாணத்தில் அவர்கள் இருவரும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். அருகருகே உள்ள ஒழுங்கைகளில் வசித்தவர்கள். ஒரு வகையில் உறவினர்களும் கூட.

அந்த வரலாற்று நாள் ஒக்ரோபர் முப்பதாம் திகதியன்று, சூட்கேசுகளோடும், உரபாக்குகளுடனும் நாவற்குழி பாலத்தால் நடந்த லட்சக்கணக்கானோரில் இவர்களும் இருவர்.

இப்போது தென்மராட்சியில் வெவ்வேறு ஊர்களில்— ஏழு எட்டு மைல் தூர வித்தியாசத்தில்— தற்காலிகமாகத் தங்கியுள்ளனர்.

ஒருவர் ஆலய மடமொன்றில் தங்கி உள்ளார். வீட்டில் அசைவம் இல்லா விட்டால் மனைவியுடன் சண்டை போடும் பேர்வழி. இப்போது சுத்த சைவம். அதுவும் ருசி, உவப்புப் பார்க்க முடியாத நிலை.

மடத்தில் தங்கியிருக்கும் எவ்லோரும் சேர்ந்து கூட்டுச் சமையல். அனேகமாக சோற்றுக்குள்ளேயே மரக்கறியைச் சேர்த்துச் செய்யும் சாதம் தான் மத்தியான உணவு. இரவில் பாண். காலையில் தேநீர் மட்டுமே. குழந்தைகளுக்கு மட்டும் இலைக்கஞ்சியும் பாணும் மாறி மாறி கொடுக்கப்படுகிறது.

உணவுப் பொருள்கள் விற்கும் விலையில் இப்படிச் சமாளிக்க வேண்டியுள்ளது. ஆலய நிர்வாகியின் தாராள மனதினால் சுமார் நூறு பேரின் காலம் இப்படி ஓடுகிறது.

மற்றவர் உறவினர் ஒருவரின் வீட்டில் மாட்டுக் கொட்டிலில் வாழ்கிறார். இவரும் குடும்பமும் நடந்து நவம்பர் மாதம் முதலாம் திகதி வந்து சேர்ந்த போது உறவினர் வீடு இடம் பெயர்ந்தோரால் நிரம்பி வழிந்து கிடந்தது.

அவர்களில் எல்லோருமே வீட்டுக்காரருக்கும், வீட்டுக்காரிக்கும் ஏதோ ஒரு வகையில் உறவு. அதனால் பிழைவிளங்கிக்கொள்ளாமல் இவர் சும்மா கிடந்த மாட்டுக் கொட்டிலைத் தானே விரும்பித் தெரிவு செய்தார்.

இரண்டு பேரும் தங்கள் தற்போதைய வாழ்க்கை நிலையைப் பேசிக் கொண்டார்கள். முதலாமவர் பாலசுந்தரம். அவர் சொன்னார்:-

இந்த இடம்பெயர்வு ஒரு சமூக மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கிறது. நீங்கள் அவதானித்தீர்களோ, என்னவோ, மாளிகையில் வாழ்ந்தவரும் சாதாரண கல்வீட்டில் வசித்தவரும், குடிசையில் இருந்தவரும் என்று, எல்லோருமே இப்போது ஒரே மட்டத்துக்கு வந்திருக்கிறார்கள்! அதனால் உயர் மட்டம், மத்திய வகுப்பு, அடி மட்டம் என்ற வர்க்க பேதம் அனேகமாக இல்லாமல் போயிருக்கிறது—என்றார்.

அடுத்தவர் நடேசமூர்த்தி. அவர் வாய் திறந்தார்:-

என்ன சொன்னாலும் பாருங்கோ, யாழ்ப்பாணத்தார் வைதீகம் நிறைந்தவை. நிலைமை சரிவர, அது தான் இயல்பு நிலைக்கு வர, பழைய மட்டங்கள், படிகள் எல்லாம் வந்துவிடும் – என்றார்.

பாலசுந்தரம் சொன்னார்:-

அது உங்களுடைய பிழையான கணிப்பு. இன்னும் கொஞ்சக் காலத்துக்கு நாங்கள் எல்லாம் இப்படி இடத்துக்கு இடம் தெல்லோடிக் கொண்டு இருக்கத்தான் நேரிடும் என்பது எனது கணிப்பு.

இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றினதோடு எல்லாம் தங்கள் கையில் என்று அரசாங்கம் நினைக்கலாம். இந்த வெற்றியைத் தொடர்ந்து தாங்கள் வடபகுதியை முற்றாகக் கைப்பற்றி விடலாம் என்றும் நினைக்கலாம்.

அது வெறும் கற்பனையாகத் தான் இருக்கும் பாருங்கோ. இதனைத்தானே இராணுவ விமர்சகர்கள் எல்லோரும் கூறுகிறார்கள். சரியான போர் இனித்தான் தொடங்கப் போகிறது என்று அவர்கள் கூறுவதை நீங்கள் அவதானிக்கவில்லையா?

யாழ்ப்பாணத்துக்கு வந்திருக்கும் இராணுவம் தென்மராட்சிக்கும் வடமராட்சிக்கும் வர நினைக்காது; இன்னோர் இராணுவ நடவடிக்கையைத் தொடங்காது; என்று என்ன நிச்சயம்; என்ன உத்தரவாதம்?

நடேசமூர்த்தி குறுக்கிட்டார்—

அப்படியானால் நாங்கள் இங்கு இருப்பது பாதுகாப்பில்லை என்கிறீர்களோ? வன்னிப்பக்கம் வாய்ப்பாக இருக்கும் என்று சொல்கிறீர்களோ?

மீண்டும் பாலசுந்தரம்:-

தென்மராட்சி, வடமராட்சி இப்போது பாதுகாப்பில்லை என்று கூறவில்லை. அரசு இனி என்ன செய்யப்போகிறது என்பதைப் பொறுத்து நிலைமை திடீரென மாறலாம் அல்லவா?

அத்தோடு தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகள் யாழ்ப்பாண நகரம் இருந்ததைவிட சன நெருக்கம் கூடிய இடங்களாக மாறிவிட்டன.

வன்னிப்பக்கத்துக்கு ஆகக்குறைந்தது இன்னும் ஒரு லட்சம் ஒன்றரை லட்சம் மக்கள் போனால்தான் இந்தப்பக்கங்கள் வெளிக்கும் நோய் பிணிகளிலிருந்து தப்பலாம்—என்றார்.

அங்கு போய் நாங்கள் எங்கே இருக்கிறது? சொந்தக்காரரும் இல்லை...... என்று தலையைச் சொறிந்தார் நடேசமூர்த்தி.

அது குறித்துக் கவலைப்படத் தேவையில்லை. கிளாலியைக் கடந்து நல்லூரில் இறங்கியதும் அங்கே புதுவாழ்வு காத்திருக்கிறது... தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அதனைப் பார்த்துக் கொள்ளும் என்றார் பாலசுந்தரம்.

அப்ப வன்னிக்குப் போனால் வளமான வாழ்வு என்கிறீர்கள்; அப்படித்தானே...! — இது இரண்டாமவரின் குரல். ★

— மயூரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### கார் விற்பனைக்கு

7 ஸ்ரீ மொறிஸ் ஒக்ஸ் போட், EN மொறிஸ் மைனர் (5 ஸ்ரீ என்ஜின்) தொடர்பு: தி. எழிலரசன், C/o. K. பால சுப்பிரமணியம் (D. S. மன் னார்) தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (39451)

### இடமாற்றம்

ஜெயா அழகு மாடம் சாவ கச்சேரி பழைய நீதி மன்றக் கட்டடத்திற்கு முன்பாக (கோட்டடி) இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளர் களுக்கும் வர்த்தகப் பெரு மக்களுக்கும் அறியத் தருகின் றோம். (39317)

### நாளை குருமாற்றம்

நாளை காலை 10-30 மணியளவில் (9-03 நாடிக்கு) ராகு கேதுக்களும், பின்னிரவு 5-55 மணிக்கு (59.52 நாடிக்கு) வியாழனும் முறையே கன்னி, மீனம், தனு ராசிகளுக்கு மாற்றமடைகின் றன. எங்கும் விற்பனையா கின்றன. (39327)

# இடமாற்றம் பெறும் ஆசிரியர் விவரம்

பருத்தித்துறை, டிச. 5

வடக்குக் கிழக்கு மாகா ணத்துக்கு உட்பட்ட மாவட் டங்களுக்கு இடையேயான வருடாந்த ஆசிரியர் இடமாற் றப் பட்டியல் வெளியிடப்பட் டிருக்கிறது.

இதன்படி இடமாற்றம் பெற்ற 97 ஆசிரியர்களில் 25 பேரின் விவரங்கள் கடந்த 2 ஆம் திகதி உதயனில் வெளி யாகியிருந்தன.

மேலும் 25 ஆசிரியர்கள் — அவர்களின் தற்போதைய பாடசாலை — அவர்கள் இட மாற்றம் பெறும் கோட்டம் அல்லது மாவட்டம் என்பன வற்றின் — விவரம் வருமாறு:

திருமதி ச. நரேந்திரா — நிலாவெளி ம. வி. — மட்டக் களப்பு

திருமதி ச. மனோகரன் — திருமலை பள்ளிக்குடியிருப்பு கலைமகள் வித்தியாலயம் — ஏறாவூர்.

திருமதி தெ. சந்தணவடிவு — குச்சவெளி விவேகானந்தா ம. வி — முல்லைத்தீவு.

திருமதி ம. அருள்மொழி ராஜா — நிலாவெளி கோபால புரம் அ. த. க. பா — யாழ்ப் பாணம்.

ஆர். முத்துலிங்கம் — மூதூர் மல்லிகைத்தீவு ம. வி — மன்முனை தெற்கு.

செல்வி ம. தங்கவடிவேல் — திருமலை மெதடிஸ்த பெண்கள் பாடசாலை — பருத்தித்துறை

வே. க. சந்திரகுமார் — பேராறு பரமேஸ்வரா ம. வி — கிளிநொச்சி.

திருமதி செ. உமாகரன் — கப்பல்துறை அ. த. க. பா — நெடுந்தீவு.

செல்வி செ. காந்திமதி — இரணை இலுப்பைக்குளம் அ. த. க. பாடசாலை — வவு னியா.

திருமதி அ. சிவராமலிங் கம் — இலுப்பைக்கடவை அ. த. க பாடசாலை — கர வெட்டி.

செ. நவரத்தினராசா — இலுப்பைக்கடவை அ. த. க. பாடசாலை — துணுக்காய்.

க மகேஸ்வரன் — அடம்பன் ம. வி. — கோப்பாய்.

செல்வி சு. ராதிகா — தாழ் வுப்பாடு றோ. க. த. க பாட சாலை — வவுனியா.

அ. மேரியோசப்பின் — உயிலங்குளம் றோ. க. த. க — வவுனியா.

செல்வி கை. கைலாச நாயகி — மட்டு. திருப்பெருந் துறை ஸ்ரீமுருகன் வித்தியால யம் — திருமலை.

திருமதி வி. சரசானந்தம் — திருக்கோவில் குமரவித்தி யாலயம் — மட்டக்களப்பு.

பி. இராமகிருஷ்ணன் — கல்முனை சிவசக்தி வித்தியா லயம் — வவுனியா.

தி. உதயசூரியன் — ஊரெழு சி. சி. த. க. பாடசாலை — கிளிநொச்சி.

திருமதி க. கிருஷ்ணகுமார் — அல்வாய் சின்னத்தம்பி வித். — கரைச்சி.

ஆ. செல்வராசா — விக் ரோரியா கல்லூரி — கிளி நொச்சி.

கு. திருச்செல்வம் — நவாலி ம. வி. — கிளிநொச்சி.

சி. சபேசன் — ஆழியவளை சி. சி. த. க. பாடசாலை — கிளிநொச்சி.

ந. சுப்பிரமணியம் — உடுத் துறை ம. வி — கிளிநொச்சி,

சி. பாலகிருஷ்ணன் — யா/ குட்டியபுலம் அ. த. க. பாட சாலை — கிளிநொச்சி.

திருமதி ச. கனகரத்தினேஸ் வரி — கரவெட்டி மாணிக்க வாசகர் வித்தியாலயம் — கிளிநொச்சி. (ஐ-118)


## இடமாற்றம்

மானிப்பாய் வீதி, ஒட்டுமடத்தில் இயங்கிவந்த

**முருகன் முறிவு நோவு வைத்தியசாலை**

தற்போது

பண்டிதர் குடியிருப்பில் இயங்குகின்றது

என்பதை அறியத்தருகிறோம்.

வைத்தியர்
இ. முருகேசு
வேலணை

[39329]



## அண்ணா தொழிலக தயாரிப்புகள்

★ அண்ணா கோப்பி ★ ஜீவாகாரம்
★ உழுந்து மா ★ ஒடியல் மா
★ அரிசி மா ★ மிளகாய்த் தூள்

உங்கள் தேவைக்கேற்ப தொகையாகவோ, சில்ல றையாகவோ எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**அண்ணா தொழிலகம்**
ஐயர் கடை சந்தி,
மீசாலை.

[சி/2904]


## தேடுகிறார்

நாவற்காட்டான் மகாவித்தியாலய ஆசிரியர் மு. சண்முகமூர்த்தி தனது தந்தை சுழிபுரம் மேற் கைச் சேர்ந்த சு. முருகேசு, தாய் மு. இலட்சுமி ஆகியோரைத் தேடுகின்றார்.

தகவல்:
மு. சண்முகமூர்த்தி
[மகன்]

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
ந. சிவனேஸ்வரராசா,
நுணாவில் சந்தி,
சாவகச்சேரி. [39452]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தவத்திரு

**S.S. வில்வரசிங்கம் அ.ம.தி.**

(இறைபதம் 5. 11. 95)

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இரங்கல் கூட்டுத் திருப்பலி பங்குத்தந்தையின் தலைமையில் மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் 7-12-95 காலை 6.45 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

அத்தருணம் பல பங்குகளில் 65 வருடங்கள் சமய சமூகத் தொண்டாற்றிய தியாகியின் ஆத்ம சாந்திக் காக திருப்பலியில் பங்குகொண்டு நன்றி அஞ்சலி செய்வோமாக.

இறை அன்பர்
மிருசுவில். [39278]

## சந்திப்பு

யாழ். மாவட்ட அரச சார் பற்ற நிறுவனங்களின் இணைய அங்கத்துவ நிறுவ னப் பிரதிநிதிகளை யாழ். அரச அதிபர் நாளை புதன் கிழமை காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அமைந்துள்ள அரச செயலகத்தில் சந்திக்க உள்ளார். (இ)

## மருத்துவபீட மாணவர் இருவர் கைது!

யாழ். மருத்துவபீட மாண வர்கள் இருவர் கொழும்பு கிர கறி வீதியில் வைத்து கடந்த 29 ஆம் திகதி கைது செய்யப் பட்டிருப்பதாக ''லங்காதிப'' செய்தி வெளியிட்டிருக்கிறது.

## பாம்புக் கடிக்கு ஆளாவோர் அதிகரிப்பு

தென்மராட்சிப் பகுதியில் அண்மைக் காலமாக பாம்புக் கடிக்கு இலக்காவோர் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாக வைத்தியசாலை புள்ளி விவரங்கள் தெரிவிக் கின்றன.

புதிதாக வீடுகளை அமைப் பதற்காக பற்றைகளைத் துப் [illegible] மக்களே அதிகம் பாம்பினால் கடியுண்டுவருவ தாகத் தெரிவ[illegible]

### தென்மராட்சிப் பகுதியில்

# சிறிய சந்தைகள் பலவற்றில் வியாபாரம் களை கட்டுகிறது

தென்மராட்சி டிச. 5

தென்மராட்சியில் வரணி, மீசாலை, எழுதுமட்டுவாள், மிருசுவில் ஆகிய இடங்களில் மூன்னர் சிறிய அளவில் இயங்கி வந்த சந்தைகள் தற்போது விஸ்தரிக்கப்பட்டு அங்கெல்லாம் வியாபார நடவடிக்கைகள் களைகட்டத் தொடங்கியுள்ளன,

ஒரு சில வியாபாரிகளை மட்டுமே கொண்டிருந்த இச் சிறிய சந்தைகளில் இப்போது சிறு சிறு விற்பனை நிலையங் கள் பல அமைக்கப்பட்டுள்ளன.

பெரும் எண்ணிக்கையானோர் இந்தச் சந்தைகளுக்கு தின மும் வருவதால் வியாபார நடவடிக்கைகள் சுறுசுறுப்படைந் துள்ளன.

புதிது புதிதாகப் பல வியாபாரிகள் அங்கு கடை வைக் கத் தொடங்கியுள்ளனர். (ஐ-117)

### ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

## பரிசூதிய சீட்டிழுப்பு 1, 11

ஊர்காவற்றுறை ப. நோ, கூ. சங்க கிராமிய வங் கியில் பரிசூதியம் 1, பரிசூதியம் 11 ஆகியவை 5 ஆம், 15 ஆம் திகதிகளில அதிர்ஷ்டம் பார்க்கப்படும். இது தொடர்பாக வாடிக்கையாளர்கள் இல. 19, நவீன சந்தை மேல் மாடியில் இயங்கும் கிராமிய வங்கியில் தொடர்பு கொள்ளவும்.

கிராமிய வங்கி முகாமையாளர்

(சி/2907)

## முக்கிய அறிவித்தல்

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிஸ் பூ. இளையதம்பி ஆகிய நான் பொது மக்களாகிய உங்களுக்கு அறியத்தருவதாவது.

என்னால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உறுதிகளை வேலைகள் முடிந்து இருப்பதால் தங்கள், தங்கள் உறுதிகளைக் கீழ்க்காணும் தற்காலிக முகவரியில் 28-12-1995 ஆம் திகதி முன்னதாக உடன் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பூ. இளையதம்பி
பிரசித்த நொத்தாரிஸ்
சட்டத்தரணி.

தற்காலிக முகவரி:
கி. நடராசா,
நகுலன் வீதி,
மீசாலை வடக்கு,
கொடிகாமம். [39325]


## இடமாற்றம்

**ராசி சில்க்ஸ்**
**(ராசி பட்டுச் சோலை)**

யாழ். நவீன சந்தையில் அமைந்திருந்த எமது ஸ்தாபனம் இன்று முதல் (4.12.95) கொடிகாமம் புகையிரத நிலையம் முன்பாக இயங்க ஆரம்பித்துள் ளது என்பதனை அன்புக்கினிய வாடிக்கையாளர்க ளுக்கு அறியத் தருகிறோம்.

(சி-3125)


## சந்தை இடமாற்ற அறிவித்தல்

பொதுமக்களின் நன்மை கருதி மீசாலை பழைய புகையிரத நிலையத்தடியில் நடைபெற்ற சந்தை 1995-12-6 புதன்கிழமை தொடக்கம் புதிய புகை யிரத நிலையத்திற்கு முன்பாக அதற்கென அமைக் கப்பட்டுள்ள இடத்தில் [புதுச்சந்தையில்] நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

வணிகர் மன்றம்
மீசாலை.

[39330]


### பப்படம் தயாரிப்பாளர்களுக்கோர்

## நற்செய்தி

உங்களுக்கு தேவையான உழுந்து மாவை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**அண்ணா தொழிலகம்**
ஐயா கடைச் சந்தி,
மீசாலை. (சி-2905)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## பேச்சு எதற்கு?

யாழ்ப்பாண நகரத்தைக் கைப்பற்றியதும் அங்கு சிங்கக் கொடி ஏற்றப்படும் என்று முன்னர் அரச தரப்பில் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் நேற்று இப்பத்தி எழுதப்படும் வரை, யாழ்ப்பாணத்தின், யாழ். நகரத்தின் எந்தப் பகுதியிலும் சிங்கக் கொடி ஏற்றப்பட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை.

சிங்கக் கொடியை ஏற்றுவதற்குப் பொருத்தமான கட்டடம் ஒன்றும் மீதமாகாததால்தான், இந்தத் தாமதமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஏனெனில் நகரில் எந்தக் கட்டடமும் மிஞ்சாத விதத்தில் படையினர் நகரத்தையும், புறநகர்ப் பகுதிகளையும் துவம்சம் செய்துள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடிந்தும், சரிந்தும், அரைகுறையாகவும் உள்ள கட்டடங்களைப் புனர்நிர்மாணம் செய்த பின்னர் —

இதற்கென ஒரு விசேட வைபவத்தை ஏற்பாடு செய்து —

ஜனாதிபதி, அனுருத்த, நிமால் சிறிபால டி சில்வா ஆகியோருடன் அரசின் வால்பிடிகளான கொழும்புத் தமிழ்க் கட்சிகளின் பிரகிருதிகளும் அதில் கலந்துகொண்டு சிங்கக் கொடியை ஏற்றுவதற்காக வசதியாகவும்—

இந்தத் தாமதம் ஏற்பட்டிருக்கக்கூடும்.

எப்படியோ —

எதிர்வரும் திங்கட்கிழமை ஜனாதிபதி சந்திரிகா கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசப்போகிறார் என்ற செய்தி கவனத்துக்கு உரியது.

யாழ்ப்பாண நகருக்கான போர் நடக்கும்போது இதே பிரதிநிதிகளைச் சந்திக்க மறுத்தவர் சந்திரிகா. யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய பின்னர் அந்தச் சூழ்நிலையிலேயே இந்தப் பேச்சு நடக்கவேண்டும் என்று கூறியவர்.

இப்போது எத்தகைய தொனியில், அதிகாரத்துடன் பேசுவார் என்பதனை எவரும் ஊகிக்கலாம்.

இராணுவம் நகரப் பகுதிக்குள் பிரவேசித்தபோது சிப்பாய்களை ஒரு கையில் துப்பாக்கியும், மறுகையில் வெண்புறாவும் ஏந்திச் செல்லுமாறு பணித்து —

அதனை வீடியோப் படமாக்கி உலகத்துக்குக் காட்டி தனது இரட்டை வேடத்தைப் புலப்படுத்தியவர்.

தமிழ்க் கட்சிகளுடன் பேச்சுவார்த்தையா நடத்தப் போகிறார்? இருக்காது!

யாழ்ப்பாணத்தில் சிவில் நிர்வாகம் நடத்தவேண்டும். புலிகளின் நிர்வாகத்தை இல்லாமற் செய்துவிட்டதாகவும், சமாதானச் சூழ்நிலை ஒன்று தோன்றியிருப்பதாகவும் உலகத்துக்குக் காட்டவேண்டும்.—

எனவே ஐயாயிரம், பத்தாயிரம் தமிழர்களை யாழ்ப்பாணத்தில் கொண்டு போய்க் குடியமர்த்தவேண்டும் —

அந்தச் செயற்பாட்டுக்கு முன்னின்று உதவினால்தான் உங்களை உண்மையான நண்பர்களாகக் கருதுவேன். அதற்குப் பரிசாகச் சில இரண்டாந்தர பதவிகளைத் தரலாம்— என்று ஆணையிட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வேண்டுமானால் அதன் பின்னர் அரசியல் தீர்வு, அரசு தயாரித்து வைத்திருக்கும் யோசனை குறித்துப் பேசுவதனைப் பரிசீலனை செய்வேன் —என்று அதிகாரத் தொனியில் சொல்லி அனுப்பக்கூடும்.

# அதிபர், ஆசிரியர் மாணவர் நடத்திய போர்ப்பிரகடன எழுச்சிப் பேரணி

### பருத்தித்துறையில் நேற்று நடந்தது

வடமராட்சி, டிச. 5

போர்ப்பிரகடன எழுச்சி வாரத்தை யொட்டி பருத்தித்துறை கோட்ட அதிபர்கள், ஆசிரியர்கள், உயர் வகுப்பு மாணவர்கள் நேற்று மாலை பிற்பகல் பேரணி ஒன்றை நடத்தினர்.

பருத்தித்துறை முதலாம் கட்டைச் சந்தியிலிருந்து ஆரம்பமான இப்பேரணி பருத்தித்துறை இறங்குதுறையில் முடிவடைந்தது.

''நாடு வீழ்ந்தால் வீடு வாழுமா, நாடு வாழ்ந்தால் வீடுவாழுமா முடிவு உன்னிடமே'' என்ற பதாதையை உயர்வகுப்பு மாணவிகள் தாங்கிவர, பாண்ட் இசைக் குழு முன்னே செல்ல அதிபர்கள், ஆசிரியர்கள் உயர் வகுப்பு மாணவர்கள் ஆகியோர் ஒன்றன் பின் ஒன்றாக ஊர்வலத்தில் சென்றனர்,

'ஆயுதம் தூக்க அரசு எம்மை நிர்ப்பந்தித்துள்ளது' ஆயுதங்களை தூக்குவோம் அதன்பின் எழுது கருவிகளை தூக்குவோம்' 'நாம் வாழ எதிரி எம்மை விட்டானா எங்கள் சமூகமே விழிப்புணர்ச்சி பெற்றுக் கொள்ளுங்கள்' போன்ற கோஷங்கள் பேரணியில் ஒலிபெருக்கியில் எழுப்பப்பட்டன.

பேரணி பருத்தித்துறை இறங்குதுறையை அடைந்ததும் அங்கு பொதுக் கூட்டமும் இசைநிகழ்வுகளும் இடம் பெற்றன. (ஐ-173)

# இருவார உலர் உணவு நிவாரணம்

சாவகச்சேரி, டிச. 5

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு இருவார உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவிருக்கிறது.

'லங்கா கல்யாணி'' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டதும் —

புதிய உலர் உணவு பங்கீட்டு அட்டை வழங்கி முடிக்கப்பட்டதும் — உலர் உணவு நிவாரணம் வழங்கப்படும்.

நிவாரணமாக அரிசி, மா, சீனி, பருப்பு, பயறு, லக்ஸ்பிறே ஆகியன வழங்கப்படவிருக்கின்றன.

( 6ஆம் பக்கம் பார்க்க)

# சைக்கிள் - லொறி விபத்தில் இளம் பெண் மரணம்

### பெருங்குளம் வீதியில் சம்பவம்

தென்மராட்சி, டிச 5

சாவகச்சேரி பெருங்குளம் வீதியில் நேற்று முற்பகல் இடம்பெற்ற சைக்கிள் — லொறி விபத்தில் இளம்பெண் ஒருவர் அதே இடத்தில் பலியானார்.

பண்டத்தரிப்பிலிருந்து இடம்பெயர்ந்து கச்சாய் வீதி சாவகச்சேரியில் வசித்துவந்த இராசேந்திரம் சிவரஞ்சினி (வயது 16) என்பவரே மரணமானவர் ஆவார்.

கிளிநொச்சி போவதற்காக மட்டுவிலில் உள்ள சகோதரனின் வீட்டில் இருந்த பொருள்களை லாண்ட் மாஸ்டரில் ஏற்றிவிட்டு இவர் சைக்கிளில் வந்துகொண்டிருந்த போதே இந்த விபத்து நிகழ்ந்தது.

இவர் லொறியினால் மோதுண்டு லொறியின் பின் சில்லு தலையில் ஏறியதாகத் தெரிவிக்கப்படுகிறது

இறந்த பெண்ணின் சடலம் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டு சாவகச்சேரி திடீர் மரணவிசாரணை அதிகாரி நா. தர்மேந்திரனால் மரணவிசாரணை நடத்தப்பட்டது.

லொறியையும், லொறிச் சாரதியையும் சாவகச்சேரி காவல்துறையினர் தடுத்து வைத்துள்ளனர்.

(இ-117-31)

# நிதித்துறை அறிவிப்பு

சாவகச்சேரி, டிச. 5

பின்வருவோரை நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கச்சாய்வீதி சாவகச்சேரியில் அமைந்துள்ள தமிழீழ வைப்பகத்துக்கு வருகை தருமாறு நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

★ சின்னத்தம்பி சின்னராசா — புண்ணியர்மடம், நாயன் மார்க்கட்டு.

★ முத்தையா சுப்பிரமணியம் — (சரஸ்வதி பென்சிகவுஸ் உரிமையாளர்). 224/17 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

★ கந்தையா இலட்சுமி— அராலிவீதி, சங்கானை.

★ சின்னத்தம்பி மனோன்மணி — மணற்பகுதி, புத்தூர்.

★ ரி. சிவபாதசுந்தரம் (எம். எல்.ரி) — வளாக வீதி, திருநெல்வேலி.

★ சந்திரமதி — ஞானவைரவர் ஒழுங்கை கோண்டாவில் கிழக்கு.

★ ஜெகதாம்பிகை மகேசன் (தேவி) — 231, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

★ தம்பிப்பிள்ளை இராசையா — இல. 27, 3 ஆம் குறுக்குத் தெரு, கொழும்புத்துறை

★ செல்லத்துரை செல்வரட்ணம் — அம்மா இண்டஸ்றீஸ், இணுவில் கிழக்கு

★ சுப்பிரமணியம் ஞானசுந்தரம் அல்லது ஞானசுந்தரம் இராஜேஸ்வரி — (யாழ்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# படை விலக்க அரசை வற்புறுத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குப் பெரும் துன்ப துயரங்களை ஏற்படுத்தும் என்றும் அக்கடிதத்தில் எச்சரித்திருந்தோம்.

தமிழர்களின் இதயபூமி ஆகிய யாழ்ப்பாணத்தை நோக்கிய ஸ்ரீலங்காவின் படை எடுப்பு, யாழ் பிரதேசத்தில் வாழ்ந்த ஐந்து லட்சம் வரையிலான மக்கள் தமது இருப்பிடங்களைத் துறந்து முழுமையாக வெளியேறுமாறு செய்துள்ளது என்பதைத் தங்கள் கவனத்திற்குச் சமர்ப்பிக்கும் நிர்ப்பந்தத்தை நமக்கு ஏற்படுத்தி உள்ளது.

மிக அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கை, மக்கள் மிகச் செறிவாக வாழ்ந்து வரும் வலிகாமம் பகுதியில் இடம்பெறுகிறது. அத்துடன் போர் நடைபெறும் களத்திலிருந்து மிகுந்த தொலைவிலுள்ள கட்டடங்கள் நிறைந்த குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கண்மூடித்தனமான ஷெல்களும் குண்டுகளும் வீசப்படுகின்றன.

### மக்கள் படுகொலை

இதனால் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் பலர் கொல்லப்பட்டுள்ளனர் மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர். அத்துடன் மக்களின் உடைமைகளுக்கும் அரசாங்க உடைமைகளுக்கும் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

சென்ற சில ஆண்டுகளாகத் தமிழர் மீது இடம்பெற்று வரும் எண்ணற்ற ஒடுக்கல் நடைமுறைகள் போதாவென்று இப்பொழுது எடுக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகள், தமிழ் மக்களின் பாதுகாப்பு, நல்வாழ்வு ஆகியன பற்றியோ, அவர்களின் அரசியல், மனித உரிமைகள் பற்றியோ ஸ்ரீலங்கா அரசுக்கு எவ்வித அக்கறையும் இல்லை என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன.

தமிழ் மக்களின் விருப்பத்திற்குமாறாக அவர்களைத் தனது சட்டவலுவற்ற கட்டுப்பாட்டின் கீழ், வெறும் வன்மமும் நிறைந்த போக்கில் படை வலிமையினால் அடக்கி வைப்பதிலேயே அரசாங்கம் ஈடுபாடு கொண்டுள்ளது.

### தேசிய உரிமைகளை மீறுகிறது

ஐ. நா. நிறுவனத்தின் உறுப்பு நாடுகள், உலகம் எங்கும் உள்ள மக்களின் தேசிய மனித உரிமைகளைப் பற்றி மேலும் மேலும் கவனம் செலுத்திவரும் காலம் இது. இந்தச் சூழ்நிலையில் தமிழ் மக்களின் தேசிய உரிமைகளையும் மனித உரிமைகளையும் ஸ்ரீலங்கா அரசு மூர்க்கமாக மீறி வருகிறது. இன்று ஸ்ரீலங்காவில் எப்பகுதியிலும் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கும், உத்தரவாதம் இல்லை. இந்த அவல நிலைகளையும் நிகழ்வுகளையும் சர்வதேச சமூகம் கண்டும் காணாததுபோல் வாய்மூடி மௌனியாக இருக்க முடியுமா?

ஸ்ரீலங்கா அரசாங்கம் தனது அரச அதிகாரத்தைத் தமிழ் மக்கள் மீது துர்ப்பிரயோகம் செய்வதைப் பொறுத்துக் கொண்டிருப்பது முறையா? இராணுவ ஆக்கிரமிப்பைத் தொடரவேண்டாம் என்று ஸ்ரீலங்கா அரசுக்கு எடுத்துரைப்பதற்கான முன் முயற்சிகளைத் தொடங்குவதும். இந்நாட்டின் தமிழர் தேசிய பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வினை எட்டுவதிலே துணை நிற்பதும் ஐ. நா. நிறுவனத்தின் கடப்பாடு ஆகும் என நாம் கருதுகிறோம்.

அவ்வாறான முன் முயற்சியின அவசியப்பாட்டை ,பின் வரும் உண்மைகளும் (வேறு பல ஏதுகளும்) நன்கு புலப்படுத்தும்.

★ வரலாற்று அடிப்படையில், தமிழ் மக்களும் சிங்கள மக்களும் தத்தமது தனித் தன்மைகளுடன் கூடிய இரு வேறு தேசிய இனங்களாக இந்த நாட்டில் வாழ்ந்து வந்துள்ளனர்.

★ பிரித்தானிய கொலனி ஆதிக்க நிர்வாகிகள் தான் இந்த நாட்டைவிட்டு நீங்கும் [illegible] களையும் ஸ்ரீலங்கா என்னும் ஒற்றை அரசு அமைப்பின் கீழ் கொண்டு வந்தனர் அடுத்தடுத்து வந்த ஸ்ரீலங்கா அரசாங்கங்கள் தமிழர்களிடம் இருந்து பறித்தெடுக்கக் கூடாத சுயநிர்ணய உரிமை உட்பட பல உரிமைகளை மறுத்து, அவர்களை இராணுவ வலிமையினால் அடிமைப்படுத்த முயன்று வந்துள்ளன.

### தமிழர்களைக் கட்டுப்படுத்தா

★ 1931 ஆம் ஆண்டுக்குப் பிந்திய வரலாற்றை நுணுகி நோக்கினால் பின்வரும் உண்மைகள் புலப்படும். சிங்கள அரசியல் தலைவர்களும் பிரித்தானிய நிர்வாகிகள் சிலரும் 1948 இல் ஓர் அரசியல் யாப்பை புகுத்தினர். அந்த யாப்பு தமிழரின் உரிமைகளை மறுத்து சிங்களவரின் ஆதிக்கத்தைக் திடப்படுத்தியது. இந்த யாப்பினையோ, பின்னர் சிங்களப் பெரும்பான்மை அரசுகள் புகுத்திய பிற யாப்புக்களையோ தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டு ஒப்புதல் அளிக்கவில்லை. இதனால், அந்த அரசியல் யாப்புக்கள் தமிழ் மக்களைக் கட்டுப்படுத்தமாட்டா.

★ இப்பொழுது சிங்களப் பாதுகாப்புப் படைகள் மேற்கொண்டுள்ள நகர்வு இலட்சக்கணக்கான தமிழர்களைத் தம் தாயகத்திலிருந்து விரட்டியது. அது உண்மையிர் ஓர் ஆக்கிரமிப்பே. அரசாங்கம் தமிழர்களையும் ஸ்ரீலங்கா தேசத்தினர் என்று கருதியிருந்தால், கட்டடங்கள் செறிந்த குடியிருப்புக்கள் மீது பாரிய ஆயுதங்களை ஏவி பெரும் எண்ணிக்கையிலே உயிரிழப்புக்களையும் அழிவுகளையும் ஏற்படுத்தியிருக்காது. வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களுக்கான உணவுப் பொருள்களையும் அத்தியாவசியப் பொருள்களையும் கொண்டு வருவதற்கு தடை விதித்திருக்காது.

### உறுதி தளரவில்லை

தமிழ் மக்கள் தம் உரிமைகளின் பொருட்டுப் பல பத்தாண்டுகளாக அமைதியான வழிகளிலே கிளர்ச்சி செய்துள்ளனர். அடுத்தடுத்து வந்த அரசுகள் அவர்களை ஒடுக்க முயன்றன. எனினும் தம் குறிக்கோளின் பொருட்டுப் போராடும் உறுதியில் அவர்கள் தளரவில்லை.

இந்த நாட்டின் நிலைமை விரைந்து சீரழிந்து செல்கிறது என்பதனை ஐ.நா.நிறுவன உறுப்பு நாடுகளின் கவனத்திற்குக் கொண்டு வந்து தமிழ் மக்கள் தம் சொந்த இருப்பிடங்களுக்கு மீண்டும் சென்று அமைதியாக வாழ வழிவிடும் வகையில், தமிழர் தாயகத்திலிருந்து ஆயுதப் படைகளை விலக்குமாறு ஸ்ரீலங்கா அரசாங்கத்தை வற்புறுத்துவதற்கு முன் முயற்சி எடுக்கும் வண்ணம் தங்களை நாம் வேண்டுகிறோம்.

சுதந்திரத்தின் பின் அடுத்தடுத்து வந்த ஸ்ரீலங்கா அரசாங்கங்களின் படை வலிமையினால் தமிழர்களின் அரசியல் வேட்டைகள் அடக்கி ஒடுக்கப்பட்டன. அவ்வேட்டைகளைத் திருப்தி செய்யும் வகையிலான அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறும் தங்களை வேண்டுகிறோம்.

### நேரடியாக அனுப்ப உதவுக

ஸ்ரீலங்காப் பாதுகாப்புப் படைகளின் வன்மம் நிறைந்த நடவடிக்கையால் ஐந்து லட்சம் வரையிலான தமிழ் மக்கள், வீடு இழந்து இரவோடு இரவாக இடம் பெயர்ந்து அணை துணையின்றி அவலப்பட்டு நிற்கின்றனர். இவர்களுக்கு வேண்டிய உணவு, உறையுள், சுகாதார வசதிகளுக்கு வேண்டிய நிதி உதவிகளையும், பொருளுதவிகளையும் அரசு சாரா நிறுவனங்கள் மூலம் நேரடியாக அனுப்பி வைத்திட உதவுமாறு ஐ. நா. நிறுவன உறுப்பு நாடுகளைக் கேட்டுக் கொள்ளுமாறும் அன்புடன் வேண்டுகிறோம்.— இவ்வாறு அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## புதிய ராணுவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) துக்கு எதிராக மக்கள் இடம் பெயர்ந்து ஈட்டிய பாரிய வெற்றி பயனற்றதாக மாற அனுமதிக்கக்கூடாது.

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்தோம். இப்போது வன்னிக்கு போக வேண்டுமா என்று மக்கள் நினைப்பது எமக்குத் தெரியும் மக்களின் நிலைமை அவர்களின் உணர்வுகள் ஆகியவற்றை நாம் நன்றாகப் புரிந்துள்ளோம்.

### வரலாற்று தேவை

அதேவேளை —

எமது இனத்தின் வரலாற்றுத் தேவை கருதி மக்கள் இடம்பெயர வேண்டிய தேவை உருவாகிவருகிறது.

தென் தமிழீழத்தையும், தீவகத்தையும் படையினர் ஆக்கிரமித்தபோது கூறிய ஆசைவார்த்தைகளைத்தான் இன்றும் சிங்கள அரசு கூறுகின்றது.

அங்கு நடந்தது என்ன என்பது உங்களுக்குத் தெரியும். சிறைக்கூட வாழ்க்கைதான் அங்குள்ளவர்களுக்குக் கிடைத்தது.

வன்னியை நாம் அந்நிய மண்ணாகப் பார்க்கக் கூடாது. வன்னியின் பூலோகச் சூழலை நோக்குமிடத்து வளமுள்ள இடம். எமது வளமுள்ள வாழ்வுக்கு வன்னி கைகொடுக்கும் என்பதை உணரவேண்டும்.

### வெற்றியை பயனாக்க

எமது மக்கள் இடம்பெயர்வு மூலம் ஏற்படுத்திய பாரிய வெற்றியை முழுமையாக்க வேண்டுமானால் மக்களின் இடம்பெயர்வு அவசியமானதாகவே அமைகிறது.

முதற்கட்டமாக வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் வன்னிக்கு செல்வதன் மூலம் எதிர்வரும் நாட்களில் ஏற்படும் நெருக்கடியை குறைக்க முடியும் — என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவுறுத்தி உள்ளனர். (அ-3)

---

### சூரியப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) வலகப் பகுதியில் இருந்து யாழ். நகரின் மையப்பகுதியை நோக்கி முன்னேறிய படையினரும் ஆரியகுளத்திலிருந்து முன்னேறிய படையினரும் இணைந்து கொண்டுள்ளனர். என்றும் நடவடிக்கை தலைமைச் செயலகம் அறிவித்தது. (இ)

---

## சிமெந்து ஊழியர் கொடுப்பனவு

ஒக்ரோபர் மாதக் கொடுப்பனவை நாளை மறுதினம் வியாழக்கிழமைக்கு முன்னர் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பெற்றுக்கொள்ளுமாறு சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள் கோரப்பட்டுள்ளனர். (இ)

---

### இருவார...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி) ''இ'' அட்டை வைத்திருப்பவர்கள் இந்தப் பொருள்களை நிவாரணமாகவும் —

''உ'' அட்டை வைத்திருப்பவர்கள் இந்தப் பொருள்களை பணத்துக்கும் — பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

---

### பலியான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) என்று பி.ரி ஐ செய்தி நிறுவனம் அறிவித்துள்ளது.

கரை ஒதுங்கிய பதினொரு சடலங்களில் ஒன்று மட்டுமே அடையாளம் காணப்பட்டுள்ளது. விமான ஓட்டியினது சடலாமே அது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

ஏனைய பத்துச் சடங்களும் மிகவும் அழுகி உருக்குலைந்து போயுள்ளன. ஆயினும் அவற்றில் விமானப் படையினரது சீருடைகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரத்மலானை விமான நிலையத்தில் இருந்து பலாலி நோக்கிச் சென்று கொண்டிருந்த அன்ரனோவ் — 32 விமானம் பலாலியில் தரையிறங்குவதற்குச் சில நிமிட நேரங்களுக்கு முன்னராக காரைநகருக்கு அருகே திடீரெனக் கடலில் வீழ்ந்து மூழ்கியது தெரிந்ததே

இச் சம்பவத்தில் அதில் பயணம் செய்த 60 படையினர் உயிரிழந்தனர். அவர்களில் சிலரது சடலங்கள் மட்டுமே கடற்படையினரால் கடலில் இருந்து மீட்கப்பட்டிருந்தன. எஞ்சியோரின் சடலங்களை மீட்கும் பணி கைவிடப்பட்டிருந்தது.

அந்தச் சடலங்களில் சிலவே கடலில் நீண்ட தூரம் அடித்துச் செல்லப்பட்டு இராமேஸ்வம் கரையோரத்தில் ஒதுங்கியுள்ளன. (ஐ-3-6)

---

### நிதித்துறை...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி) எஸ். எச். எஸ் அலுவலகம்), முத்தட்டு மடம் ஒழுங்கை, கோண்டாவில் மேற்கு.

திருமதி புவனேஸ்வரி இரத்தினசிங்கம் — சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய்.

★ பரமேஸ்வரி குணரத்தினம் — சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.

★ திருமதி பராசக்தி சுப்பிரமணியம் — சாலம்பைத் தோட்டம் பலாலி தெற்கு, வசாவிளான்.

★ சண்முகம் வசந்தா — மே/பா வே. பரமகுரு, எம். எஸ். ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு.

★ சிமியோன் கொனஸ்ரிக்கா — ஞானப்பிரகாசம் வீதி, உடுவில், மல்வம்.

★ யோன் புஸ்பம் — 245, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

★ முருகன் கந்தையா — சென். செபஸ்தியர் வீதி, யாழ்ப்பாணம்.

★ நவரத்தினம் கனகம்மா அல்லது சுலோசனாதேவி — உடுவில் தெற்கு, மானிப்பாய்.

★ செல்வி ஜெயந்தி வினாயகமூர்த்தி — 127, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, அரியாலை.

★ சி. தங்கவேல் (ஆசிரியர்) — நாவற்காடு, அச்சுவேலி.

★ நடராஜா மகேஸ்வரி — நீர்வேலி மத்தி.

★ பரமேஸ்வரி நவரத்தினம் — 'ரதிவாசா' மீசாலை.

★ [illegible] னம்மா — 97/2 [illegible] றோட், அரியாலை. (இ)

---

## யாழ். செயலகத்தில்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி) விடுதலைப் புலிகள் பொருத்தியிருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடித்த சமயம் செயலகத்தின் கீழ் பகுதியிலும், மேல் மாடியிலும் இராணுவத்தினர் அதிகமானோர் தரித்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

செயலகக் கட்டடத்ினுள் புதைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் செயலகம் தகர்ந்து தரைமட்டமானதாகவும் —

கட்டட இடிபாடுகளிடையே இராணுவத்தினர் பலர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி சிங்கப்பூர் வானொலி அறிவித்தது.

இடிபாடுகள் அகற்றப்பட்டு வருவதாகவும், அதன் பின்னரே சேத விவரங்கள் தெரிய வரும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியதாகவும் அந்த வானொலி தெரிவித்தது.

இக் குண்டு வெடிப்பில் படையினர் தரப்பில் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டிப்பதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அது குறித்து எந்த விவரத்தையும் வெளியிடவில்லை.

குண்டு வெடிப்பினால் படையினர் எவரும் பாதிக்கப்படவில்லை என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

செயலகம் அமைந்துள்ள பகுதி உட்பட யாழ். நகரப் பகுதி முழுவதுமே படையினரின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டு விட்டதாக இராணுவத் தரப்பில் அறிவிக்கப்பட்ட பின்னர் நேற்று இடம்பெற்ற இக்குண்டு வெடிப்புச் சம்பவம் பாதுகாப்புப்படை வட்டாரங்களை அதிர்ச்சியடையச் செய்திருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன. [ஐ-3-6]

---

# மரண அறிவித்தல்கள்

## மாணிக்கம் கனகரத்தினம் (LION)

சூராவத்தை, ஏழாலை சுன்னாகத்தைச் சேர்ந்த (லயன்) மாணிக்கம் கனகரத்தினம் (முன்னை நாள் R.V.D.B. கணக்காளர்) காலமாகிவிட்டார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், மாலதி (U.K.), நந்தினி (இந்தியா), மோகன் (ஜேர்மனி), கிரிஜா, சித்திரா (U.K.) ஆகியோரின் பாசம்கு தந்தையும், சுரேஸ்குமார் (U.K.), கஜாகரன் (இந்தியா), வள்ளி )ஜேர்மனி), குணண் (U.K.) ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரதீபன், அபர்னா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (5-12-95) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கண்ணாடிப் பிட்டி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. புவனேஸ்வரி
[மனைவி]
Dr. அருள்பிரகாசம்
[மைத்துனர்]

மே/பா சு. சிவானந்தம்
''லங்கா வாசா'',
கண்டி வீதி,
மீசாலை. [ஐயா கடை] (39331)

## திருமதி தங்கேஸ்வரி பாலசிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது அல்லிப்பளையில் உள்ள மருமகன் சி.பஞ்சராசா (முன்னை நாள் தட்டுவர் கொட்டி எஸ்ரேற் சுப்பிறின்டன்) இல்லத்தில் வசித்தவருமாகிய பா.தங்கேஸ்வரி நேற்று காலை 4.00 மணிக்கு காலமானார்.

இவர் காலம் சென்ற கார்த்திகேசு பாலசிங்கத்தின் அன்பு மனைவியும், சுந்தரலிங்கம், பொன்னம்மா தம்பதிகளின் மகளும், பாலராஜா (ஜேர்மனி), பிரபாகரன் (ஜேர்மனி), தமிழ்ச்செல்வன் (ஜேர்மனி), காலஞ்சென்ற காஞ்சனா, திவ்வியாதேவி, காலஞ்சென்ற மல்லிகாதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலராஜா றெஜீனா (ஜேர்மனி). அன்பு மாமியாரும், அருண், அந்ரே, ஹரிஹரசுதா, திவ்வியராஜா ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை 5.12.95 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அல்லிப்பளையில் உள்ள மருமகன் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
மகள்: திவ்வியாதேவி (பவா)
மருமகன்: பஞ்சாரசா .சி

தற்போதைய முகவரி:
திவ்யாதேவி
மே/பா சி. பஞ்சராசா,
''எஸ்ரேற் சுப்பிறின்டன்''
அல்லிப்பளை,
பளை. (39326)

## மேலும் மரண அறிவித்தல் இரண்டாம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 5-12-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# மரண அறிவித்தல்கள்

## யோசேப்பு யோண்பிள்ளை

இல: 15, ஈச்சமோட்டை (பாசையூர்) கடற்கரை வீதி யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், தற்போது சிறி சுப்பிரமணியம் வித்தியாலயம் இடைக்குறிச்சி, வரணியை வசிப்பிடமாகவும் கொண்ட யோசேப்பு யோண்பிள்ளை நேற்று (4 - 12 - 95) திங்கட்கிழமை இறையடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் யோண்பிள்ளை அடைக்கலத்தின் அன்புக் கணவரும், யோ. பிரான்சிஸ் அருட்பிரகாசம் (கனடா), யோ. பீற்றர் வின்சன் டிப்போல் [துரை-கனடா], திருமதி கனகரத்தினம் ஜெயமலர் (கனடா), திருமதி அல்பேட் அந்தோனியா இரஞ்சிதம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திலகவதி, மரிய அரசகுலம், சு. கனகரத்தினம், இ. அல்பேட் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (5 - 12 - 95) பிற்பகல் 3 மணியளவில் வரணி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யோ. அடைக்கலம்
[மனைவி]

[39460[

## சாரதாதேவி இரத்தினேஸ்வரன்

இளவாலையை பிறப்பிடமாகவும், மறுவம் புலோவை வசிப்பிடமாகவும் கொண்ட சாரதாதேவி இரத்தினேஸ்வரன் (ஆசிரியை இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம்) நேற்று மாலை 4.00 மணியளவில் காலமானார்.

இவர் காலம்சென்ற நவரத்தினம்—சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மகளும், இரத்தினேஸ்வரனின் அன்பு மனைவியும், சக்திக்குமரனின் அன்புத் தாயாரும், இ. சகுந்தலாதேவியின் (மெய்கண்டான் வித்தியாசாலை) அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் மறுவன்புலோ இல்லத்தில் இன்று (5 - 12 - 95) நடைபெற்று பூதவுடல் 9.00 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
இ. சகுந்தலாதேவி
(சகோதரி)

முருகன் கோவிலடி,
மறுவன்புலோ. (39461)

## வெற்றிவேலு தேவதாசன்

தொல்புரத்தை பிறப்பிடமாகவும் சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு தேவதாசன் 2.12.95 அன்று காலமானார்.

இவர் வெற்றிவேலு தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், சபாரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தவமணிதேவியின் (மருந்தகம் யாழ்.போதனா வைத்தியசாலை). அன்புக் கணவரும், கோணேசகுமார் (லண்டன்), ஹம்ஸா, ரேவதி (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 3.12.95 [ஞாயிறன்று] வேம்பிராய் மயானத்தில் நடைபெற்றன என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
தே. தவமணிதேவி
[மனைவி]

முகவரி:
ச.ஞானலிங்கம் [அதிபர்]
கனகன் புளியடிச்சந்தி,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி. [39456]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org